1979 மார்ச் 3]

(இ) இவ்விடங்களுக்கான குத்தகைகள் முதலில் மூன்றாண்டு காலத்திற்கும், அதற்குப் பின்னர், குத்தகைக்காலம் முடிந்த பின்பு அவ்வப்பொழுது புதுப்பிக்கப்படுகின்றது.

இணைப்பு IX

[44ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 526-க்கான விடையைக் காண்க.]

விடை.

1977-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வீசிய புயல் காற்றினாலும் கடல் அரிப்பினாலும் தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினம் வட்டம், வேளாங்கண்ணி கடற்கரையோரப் பகுதியில் தென்னை மற்றும் பனை மரங்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது, புயலுக்கு முன்பே 30 தென்னை மரங்கள் வயது மூப்பின் காரணமாக சாய்ந்து விட்டன. புயலுக்குப்பின் 132 தென்னை மரங்கள் சாய்ந்துவிட்டன. இவை அனைத்தும் 1337 ஆவது பசலிக்கு முன்பே வைக்கப்பட்டவை. அவற்றில் புயலுக்கு முன் சாய்ந்துபோன 30 வயதான மரங்களுக்கும், புயலில் சாய்ந்துபோன 54 மரங்களுக்கும் 2 சி பட்டா வழங்கப்பட்டிருந்தன. எனவே 2சி பட்டாதாரர்கள் தமக்கிருந்த உரிமையின் காரணமாக, 84 மரங்களையும் தமது சொந்தப் பயனுக்கு வெட்டி எடுத்துக் கொண்டனர். மீதி 78 மரங்களும் பொது ஏலத்தில் விடப்பட்டு, ஏலம் உறுதி செய்வதற்காக நடவடிக்கையில் உள்ளது. இது தவிர புயலின் காரணமாக வெவ்வேறு இடங்களில் 77 பனை மரங்கள் சாய்ந்து விட்டன. இந்த மரங்களெல்லாம் '2சி' உரிமம் வழங்கப்பட்டவைகளாகும். எனவே 2சி பட்டாதாரர்கள் அவற்றைத் தங்கள் சொந்தப் பயனுக்கு வெட்டி எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அரசிற்குச் சொந்தமான பனை மரங்கள் எதுவும் புயலின் காரணமாகவோ இயற்கையாகவோ சாயவில்லை,

2. புயலின் காரணமாக இழந்த தென்னை மரங்களின் எண்ணிக்கையை ஈடுசெய்ய சிறு உழவர்களுக்கு 3,750 தென்னங் கன்றுகள் இலவசமாகவே வேளாண்மைத் துறை மூலம் வழங்கப்

பட்டுள்ளது. இது தவிர தென்னை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஒவ்வொரு ஆண்டும் தென்னங்கன்றுகளின் விலையில் 25 சதவீதம் மான்யமாக உழவர்களுக்கு பஞ்சாயத்து ஒன்றியம் மூலமாக வேளாண்மைத் துறை விநியோகம் செய்து வருகிறது. பனை மரத்தைப் பொறுத்த அளவில் இயற்கையாகவும், விவசாயிகள் தாங்களாகவே முன்வந்தும் தங்களுடைய வயல் வரப்புகளிலும் நட்டு அதனுடைய எண்ணிக்கையை அதிகரித்து வருகிறார்கள். இதிலிருந்து தென்னை மற்றும் பனை மரங்களின் எண்ணிக்கை வேளாங்கண்ணி கடற்கரையோரப் பகுதியில் அதிக அளவில் குறையவில்லை என்பது தெரிகிறது.

இணைப்பு X.

[44-ம் பக்கத்திலுள்ள குறியிடாத வினா எண் 528-க்கான விடையைக் காண்க.]

பின்வரும் திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது :—

(1) தமிழில் சிறந்த நூல்களை வெளிக்கொணர நூலாசிரியர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் வெளிவரும் சிறந்த தமிழ் நூல்களைத் தேர்ந்தெடுத்துப் பரிசளிக்கும் வகையில் சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசளிக்கும் திட்டம்.

(2) தமிழில் சிறந்த நூல்களை வெளியிடுவதற்கு நூலாசிரியர்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டம்.

(3) அரசு ஊழியர்கள் தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதுவதை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழில் சிறந்த வரைவுகள் குறிப்புகள் எழுதும் அரசுப் பணியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்.

(4) வெளி மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ் வளர்ச்சிக்காக தமிழ் இருக்கையை நிறுவவும், தமிழ் பேராசிரியர் பதவி தோற்றுவிக்கவும், தமிழில் பட்டப்படிப்பு, டிப்ளோமா வகுப்புகள், ஆராய்ச்சிக் கூட்டங்கள் நடத்துவதற்காகவும், தமிழில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வெளியிடுவதற்காகவும் நிதியுதவி அளிக்கும் திட்டம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS